**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

**அ.வ.எண். 316/2024 நாள்: 04.02.2026**

**வா.சா:– 1கௌதம் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்):–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E Mechanical Engineering படித்துள்ளேன். பிரதிவாதியை எனக்கு எப்படி பழக்கம் என்றால் எனது திருமணத்திற்கு எனது மனைவி அவரை அழைத்திருந்தார். அப்போது பழக்கம். எனது மனைவிக்கு பிரதிவாதி நண்பரா, உறவினரா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி எந்த தேதியில் எத்தனை நாட்களுக்கு முன்பு கடன் கேட்டார் என்றால் 28.05.2023ம் தேதியில் இருந்து 1 வாரம் முன்பு கடன் கேட்டார். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் விவசாயம் செய்து வருகிறேன், கயிறு உற்பத்தி செய்கிறேன். ரூ.6,00,000/– என்பது ஒரு பெரிய தொகை என்றால் சரிதான். என்னுடைய வருமானத்தை காண்பிக்க ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆவணம் உள்ளது. வருமான வரி செலுத்துகிறேனா என்றால் ஆமாம். எனக்கு எந்தெந்த வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் கனரா வங்கி மற்றும் கரூர் வைஷ்யா வங்கியில் உள்ளது. கையிருப்பு தொகையாகவே ரூ.6,00,000/– த்தை நான் வைத்திருந்தேனா என்றால் ஆமாம். இடம் வாங்குவதற்காக கையில் வைத்திருந்தேன். பிரதிவாதிக்கும் வங்கி கணக்கு உள்ளது என்றாலும், ரூ.20,000/–க்கும் அதிகமாக கைமாற்றாக பணம் பரிவர்த்தனை செய்யக்கூடாது என்றாலும் ரூ.6,00,000/– த்தை பிரதிவாதி வங்கி கணக்கு மூலமாக செலுத்தி இருக்கலாம் என்றால் விவசாய வருமானம் என்னிடம் கையில் பணமாகத்தான் இருக்கும் இடம் வாங்குவதற்காகவும் பணம் வைத்திருந்தேன். ரூ.6,00,000/– பணம் கொடுத்ததை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் மேற்படி தொகை கையிருப்பில் இருந்ததால் வருமான வரி கணக்கில் காட்டவில்லை. பணம் கொடுத்த சமயத்தில் வழக்கு கடனுறுதி சீட்டு தவிர வேறு ஏதாவது ஆவணங்கள் கடனுக்கு ஆதரவாக பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பிராமிசரி நோட்டில் கண்டுள்ள செந்தில்குமார் மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோர்களை சாட்சிகளாக

## Copy of Deposition

விசாரிக்கிறோமா என்றால் ஆமாம். பிரதிவாதிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒருபையன் மற்றும் 2பெண்கள் உள்ளனர். பிரதிவாதி எங்கு வேலை செய்து வருகிறார் என்றால் நான் கடன் கொடுக்கும்போது துப்புறவு தொழிலாளியாக திருசெங்கோட்டில் பணிபுரிந்தார். தற்போது திருவள்ளூரில் மேற்பார்வையாளராக பணிபுரிகிறார்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court read over to the witness and acknowledge by

Interpreted
Him / Her To Be Correct

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2026.02.04 15:05:30 +0200

Subordinate Judge,
Kodumudi